**தெஹியத்தகண்டி பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 24 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும், விரிவான முகாமைத்துவ அறிக்கையும் 2020 யூலை 22 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தெஹியத்தகண்டி பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 300,000 செலவினம் ஒன்றைச் செய்து நிர்மாணிக்கப்பட்ட லிஹிணியாகம வாராந்த சந்தை பொது மலசல கூடம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு உரிய விடயத்திற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ii) | தெஹியத்தகண்டி நகர பூங்காவினை அபிவிருத்தி செய்வதற்காக உள்ளாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 4,000,000 தொகையான கடன் தொகைக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய கடன் வட்டி மற்றும் தவணைப் பண பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | இந்த கணக்கீட்டு வழுக்களை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் நிறைவேற்றப்பட்ட 02 நிர்மாண வேலைகளுக்கு உரிய கடன்கொடுத்தோர் நிதி ஏற்பாடு ரூபா 1,223,974 தொகை அதிகரித்து ஒதுக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இந்த கணக்கீட்டு வழுக்களை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நிலுவையாக இருந்த வேலை உதவி ரூபா 1,288,103 தொகை குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இந்த கணக்கீட்டு வழுக்களை சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(ஆ) கணக்காய்விறகுத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 346,297,801 தொகையான 02 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 10,699,509 தொகையான 01 பொறுப்பு விடயம் என்பவற்றின் சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இந்த பதிவேடுகள் எதிர்காலத்தில் சரியாக பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 04 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது மேற்கொள்ளப்படுகின்றது என அறிக்கையிடுகின்றோம். |
| (ஆ) | 2015 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை. | செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட 05 வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனங்கள் எங்கள் நிறுவனத்தின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்கள் நேரடியாக எங்கள் நிறுவனத்தின் மூலம் விற்றுத்தீர்ப்பதற்கு முடியாமல் இருந்தமையினால் கையேற்பதற்காக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

எதிர்காலத்தில் கையளித்தல் மற்றும் விற்றுத்தீர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,044,210 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,071,890 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,528,956 | 1,415,901 | 1,047,372 | 1,938,758 | 1,488,956 | 1,728,772 | 1,466,069 | 2,555,273 |
| (ii) | வாடகை | 10,956,537 | 8,898,088 | 8,396,963 | 501,125 | 10,343,566 | 9,616,676 | 8,970,726 | 1,087,200 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,770,500 | 1,846,678 | 1,827,928 | 18,750 | 1,510,600 | 1,875,050 | 1,833,700 | 57,350 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,056,000 | 6,265,109 | 5,742,643 | 510,398 | 1,864,000 | 269,335 | 3,604,485 | 187,270 |
| | | 18,311,993 | 18,425,776 | 17,014,906 | 2,969,031 | 15,207,122 | 13,489,833 | 15,874,980 | 3,887,093 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரி ரூபா 1,938,758 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.2.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 501,125 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

#### (அ) நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத்தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 336,833 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

#### (ஆ) முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான 30 பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 01 விடயத்திற்காக மாத்திரம் உப விதி விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகள் விதிக்கப்படாத பணிகளுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | கழிவுப் பொருள் முகாமைத்துமவத்திற்காக மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட உப விதி உள்ளது. இருந்த போதிலும் ஏனைய பொது பணிகளுக்காக உப விதிகளை விதிப்பதற்குரிய தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டிருந்த போதும் இதுவரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு வருடங்களுக்காகவும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பான இலக்குகள் மற்றும் நோக்கங்கள் இனங்காணப்பட்டு ஸ்தாபிக்கப்பட வேண்டும். | 2030 இன் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இலக்குகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியில் 08 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினரின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | பதவியணியினரை அதிகரித்துக் கொள்ளல் மற்றும் மேலும் தேவையான பதவிகளை கோரி அனுப்பப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் தற்போது இருக்கின்ற பதவியணியினர் போதிளவாக இல்லை. |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பிரதேச சபையினால் இறுதி தடவையாக ஆதன வரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட 2011 இன் ஆதன வரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | எனினும், இந்த மதிப்பீட்டை பல்வேறு சந்தர்ப்பங்களில் மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக கிழக்கு மாகாண பிரதம அமைச்சரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டு அதற்கான அங்கீகாரமும் கிடைத்திருந்த போதும், கிழக்கு மாகாண மதிப்பீட்டு திணைக்களத்தினால் அது தொடர்ச்சியாக தாமதப்படுத்தப்பட்டமையினால் இது வரையிலும் அந்த பணியை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) | பிரதேச சபையினால் புதிய மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கடைகளின் மதிப்பீட்டின் அடிப்படையில் சபைக்குச் சொந்தமான 05 கடைகளில் மீளாய்வாண்டின் போதும் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | அந்த 05 கடைகளுக்காக உரிய மதிப்பீடு செய்தல் உரிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதும், இது வரையிலும் அறிக்கை கிடைத்திருக்கவில்லை. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**கையேற்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மஹாவலி அதிகாரசபை மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 05 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | இதன் கீழ் குறிப்பிடப்பட்ட 05 வாகன வகைகள் இலங்கை மஹாவலி அதிகார சபையிலிருந்தது இரண்டும் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களில் இருந்து 03 உம் வழங்கப்பட்டிருந்த போதும் இது வரையிலும் அந்த வாகனங்களுக்குரிய நிறுவனங்களினால் எங்கள் நிறுவனத்திற்கு கையளிக்கப்படவில்லை. அதனால் அந்த வாகனங்களின் கையளித்தல் தாமதிக்கப்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | இலங்கை மஹாவலி அதிகாரசபையினால் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட காணியின் அளவு 1.72 ஹெக்டேயர் அளவான 04 காணிக் கூறுகள், 07 விளையாட்டு மைதானங்கள் மற்றும் 37 மயான நிலங்கள் என்பவற்றின் உரித்து சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட வேண்டும். | தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

**3.5 பெறுகைகள்**

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டிற்காக எமது நிறுவனத்தில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்த போதிலும், அது தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |